சுருக்கம்

தமிழ்நாடு மாநில கணக்காய்வுத் தலைவரின் ஆய்வறிக்கை – கோயம்புத்தூர் மாவட்ட ஊராட்சி அலுவலகம் 1998-99 முதல் 2005-2006-ஆம் ஆண்டு முடிய உள்ள கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டது – நிர்வாக நிதிக்கு கூடுதலாக நிதி மாற்றம் செய்யப்பட்டது – பின்னேற்பு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா-3) துறை

அரசாணை (வாலாயம்) எண்.111

நாள்: 3.05.2010
சித்திரை 20
திருவள்ளுவர் ஆண்டு 2041
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.93, ஊ.வ. (சி3) துறை, நாள் 26.3.97.
2. கோவை மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதம் ந.க.எண் 417/2009/மா.ஊ.1, நாள் 17.12.2009.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின், கடிதம் ந.க.எண். 86835/06/ஏஜி(து)2 நாள் 30.12.2009.

*******

ஆணை:

மேலே 2-ல் படிக்கப்பட்ட கடிதத்தில், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர், கோயம்புத்தூர் மாவட்ட ஊராட்சி அலுவலகத்தின் 1998-99 முதல் 2005-06-ம் ஆண்டுகளுக்கான மாநில கணக்காயரின் ஆய்வறிக்கையில், மேலே 1-ல் படிக்கப்பட்ட அரசாணையில் அனுமதித்துள்ள தொகையான ரூ.15,00,000/-க்கு கூடுதலாக மாவட்ட ஊராட்சி பொது நிதியிலிருந்து கீழ்க்கண்ட விபரப்படி நிர்வாக நிதிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டு, இச்செயலுக்கு அரசின் பின்னேற்பு பெறவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

| ஆண்டு | மாநில நிதிக்குழு மான்யம் பெறப்பட்ட மொத்தத் தொகை (ரூ.) | நிர்வாக நிதிக்கு மாற்றம் செய்யப்பட்ட தொகை (ரூ.) | கூடுதலாக மாற்றம் செய்யப்பட்ட தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 2004–05 | 2,52,03,333 | 19,85,879 | 4,85,879 |
| 2005–06 | 1,93,14,086 | 20,72,887 | 5,72,887 |
| மொத்தம் | | | 10,58,766 |

மேலும், 2004-05-ம் ஆண்டில் நிர்வாக நிதியில் ஒதுக்கப்பட்ட ரூ.15,00,000/-க்கு குறைவாக செலவிடப்பட்டு மாநில நிதிக்குழு மானியத்திலிருந்து கூடுதலாக மாற்றம் செய்யப்பட்ட தொகை செலவிடப்படாமல் உள்ளது எனவும் ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

2) கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்து, இந்நிகழ்வு ஒரு தற்காலிக நிதிமாற்றம் (Temporary Diversion) என்பதாலும், கூடுதலாக பயன்படுத்தப்பட்ட நிதி மீண்டும் மாநில நிதிக் கணக்கிற்கே திரும்ப செலுத்தப்பட்டுவிட்டதாலும் மாநில கணக்காயரின் ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளபடி 2004-2005 மற்றும் 2005-2006-ஆண்டுகளில் கூடுதல் தொகையாக கோயம்புத்தூர் மாவட்ட ஊராட்சியின் நிர்வாகச் செலவுக்காக நிதி மாற்றம் செய்து, பின்னர் மாநில நிதி கணக்கிற்கே திரும்பச் செலுத்திய கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயலினை ஒரு சிறப்பு நிகழ்வாகக் கருதியும் இனி வருங்காலங்களில் மாநில நிதிக்குழு அனுமதிக்கும் மானியத்திற்குள், குறிப்பிட்ட இனங்களுக்கு மட்டுமே செலவு செய்யப்பட வேண்டும் என்றும் அனுமதிக்கப்பட்ட தொகைக்குமேல் மாற்றம் செய்யக்கூடாது, என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு மாநில கணக்காயரின் ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளபடி 2004-05 மற்றும் 2005-06-ம் ஆண்டுகளில் மாநில நிதிக்குழு மானியத்திலிருந்து நிர்வாக நிதிக்கு கோயம்புத்தூர் மாவட்ட ஊராட்சியில் கூடுதலாக நிதி மாற்றம் செய்த கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயலை சிறப்பினமாகக் கருதி பின்னேற்பு ஆணை வழங்கி அரசு ஆணையிடுகிறது.

3) இந்த அரசாணை நிதித்துறையின் அ.சா. எண். 21989/ஊ.வ/2010 நாள் 29.04.10-இல் வழங்கப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, சென்னை-15,
மாவட்ட ஆட்சித் தலைவர், கோயம்புத்தூர் மாவட்டம்,
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை 18/35,
கருவூலங்கள் (ம)கணக்குகள் தலைவர், சென்னை - 15

<u>நகல்</u>
நிதித் துறை (ஊ.வ / நிகு IV), சென்னை-9.
ஊ.வ. (ம). ஊ (வ & செ / ஊ.அ. II) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.